**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**முன்னிலை – திரு.எம்.பரமசிவம், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஜெயங்கொண்டம்**

**2021 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாள் திங்கள்கிழமை**

**2052 திருவள்ளுவராண்டு, சார்வரி வருடம் மாசி திங்கள் 17 ம் நாள்**

**அசல் வழக்கு எண் (O.S.) 82/2013**

பன்னீர்செல்வம் ... வாதி

/எதிர்/

வேளாங்கன்னி (எ) ஆரோக்கியசாமி ... பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக 5.2.2021 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.நடராஜன் அவர்களும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.முருகேசன் அவர்களும், முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்குரை, எதிர்வழக்குரை, சாட்சி மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**தீர்ப்புரை**

1. தாவா சொத்துக்களை பொறுத்து வாதியின் அமைதியான அனுபவத்தில் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ இடையூறு செய்யாத வண்ணம் ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவும் தாவா செலவுத் தொகை வாதிக்கு கிடைக்கவும் பிரார்த்திக்கிறார்.

**2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராதின் சுருக்கம்.**

தாவா சொத்து ஆதியில் வேதநாயகம் அனுபவம் செய்து வந்து பின்பு வேதநாயகம் என்பவரிடம் வாதியின் தந்தை தாவீது 8.10.1956 ம் தேதியில் கிரயம் பெற்றார் என்றும் வாதியின் தந்தை தாவீது கிரயம் பெற்ற தேதியில் இருந்து தாவா சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றும் வாதியின் தந்தை தாவீது இறந்த பின்பு தாவா சொத்தை வாதியும், வாதியின் அண்ணன் சின்னப்பன் என்பவரும் அனுபவம் செய்து வந்தார்கள் என்றும் தாவா சொத்துக்களை வாதியின்

அண்ணன்களும், வாதியும் பாகம் பிரித்துக்கொண்டதில் தாவா சொத்தை வாதிக்கு, வாதியின் அ ண்ணன் சின்னப்பன் பதிவு செய்யப்படாத பாக அட்டவணை போட்டு பிரித்து வாதிக்கு விட்டுக்கொடுத்துவிட்டார் என்றும் பாகம் பிரித்துக்கொடுத்ததிலிருந்து தாவா சொததை வாதி அனுபவம் செய்து வருகிறார் என்றும் வாதி தாவா சொத்தில் ஓட்டுவீடு கட்டி, பட்டா பெற்று, வீட்டுவரி, மின் கட்டணம் செலுத்தி குடியிருந்து வருகிறார் என்றும் தாவா சொத்தில் பிரதிவாதிக்கு எந்த உரிமையும் அனுபவமும் கிடையாது என்றும் தாவா சொத்தைப் பொறுத்து பிரதிவாதி, வாதி, வாதியின் அண்ணன் சின்னப்பன் என்கிற சூசை மீது அ.வ.30/1991 வழக்கு தொடர்ந்து அந்த வழக்கு வாதிக்கும், வாதியின் அண்ணன் சின்னப்பன் என்கிற சூசைக்கு சாதகமாகியுள்ளது என்றும் எனவே தாவா சொத்துக்களை பொறுத்து வாதியின் அமைதியான அனுபவத்தில் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ இடையூறு செய்யாத வண்ணம் ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவும் தாவா செலவுத் தொகை வாதிக்கு கிடைக்கவும் பிரார்த்திக்கிறார்.

<u>3. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்.</u>

தாவா சொத்திற்கு கீழ்புறம் உள்ள சொத்து இப்பிரதிவாதியுடையது என்றும் இப்பிரதிவாதியின் சொத்தில், வாதி அத்துமீறி நுழைந்து வீண் விவகாரம் செய்து வருகிறார் என்றும் இப்பிரதிவாதியின் சொத்து வாதி வீட்டு கிழக்கு பக்கம் உள்ளது என்றும் அந்த இடத்தினை இப்பிரதிவாதியின் பெரியதந்தை மற்றும் இப்பிரதிவாதியின் தந்தை ஆகியோர் ஒரு சுந்தரம் என்பவரிடம் இருந்து கடந்த 60 வருடங்களுக்கு முன்பு வாதி சொத்திற்கு பக்கத்தில் வாங்கியுள்ளார்கள் என்றும் அது முதல் இன்று வரை இப்பிரதிவாதியே அனுபவம் செய்து வருகிறார் என்றும் எனவே தாவாவை செலவுத்தொகையுடன் தள்ளபடி செய்ய வேண்டும் என்று முன்வைக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றைக் கவனமுடன் பரிசீலனை செய்து 25.02.2014ம் தேதியன்று இந்நீதிமன்றம்

கீழ்க்கண்ட எழுவினாக்களை வனைந்துள்ளது.

**5. எழுவினாக்கள் –**

1) வாதிக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

2) வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

6. இவ்வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1, வா.சா.2 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.1, நீ.ம.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**8. எழுவினா 1–க்கு தீர்வு**

வாதி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் தாவா சொத்தில் வாதியின் தந்தையால் 8.10.1956ம் தேதியில் கிரயம் வாங்கப்பட்டது என்றும் இதனை வாதியும், வாதியின் அண்ணனும் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் வாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றும் அதில் வாதி ஓட்டுவீடு கட்டி வீட்டுவரி செலத்தி மின் இணைப்பு பெற்று குடியிருந்து வருகிறார் என்றும் தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் ஆனால் தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தில் பிரதிவாதிகள் தொடர்ந்து இடையூறு செய்து வருகிறார் என்றும் எனவே வழக்கை அனுமதிக்க வேண்டும் என்று வாதம் புரிந்துள்ளார்.

9) பிரதிவாதி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கு சொத்து சம்பந்தமாக ஏற்கனவே அ.வ.30/91 என்ற அசல் வழக்கு, இப்பிரதிவாதி வாதியாக இருந்து இந்த வழக்கின் வாதி மற்றும் அவரது

அண்ணன் ஆகியோர் மீது அசல் வழக்கு தாக்கல் செய்து அது கீழமை நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டு பின்னர் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் இப்பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது என்றும் அந்த விவரத்தை மறைத்து வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தாவா சொத்து என்பது வாதியின் வீட்டிற்கும், பிரதிவாதியின் வீட்டிற்கும் இடையில் உள்ள சந்து பகுதி ஆகும் என்றும் அதில் பிரதிவாதிக்கு நடைபாதை உறுமையுள்ளது என்றும் எனவே வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதம் புரிந்துள்ளார்.

10) தாவா சொத்தானது உடையார்பாளையம் தாலுக்கா, தென்னூர் ஆரோக்கியபுரம் சர்வே எண் 202/1 புதிய சர்வே எண் 304/3 ல் கீழ்மேல் காலடி 30, தென்வடல் காலடி 175 அளவுள்ள இடமாகும்.

11) இச்சொத்தானது வாதியின் தந்தை தாவீது என்பவரால் 8.10.1956 ம் தேதி கிரயம் வாங்கப்பட்டது என்று வாதி கூறியுள்ளார். மேற்படி கிரயப்பத்திரம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி வாதியின் தந்தை தாவீது சர்வே எண் 202/1ல் கீழ்மேல் காலடி 30, தென்வடல் காலடி 175 உள்ள மனை, தோட்டம் ஆகியவற்றை கிரயம் வாங்கியுள்ளார்.

12) மேற்சொன்ன வா.சா.ஆ.1ல் கண்டுள்ள கிரயப்பத்திரத்தில் கண்ட சொத்தானது தாவா சொத்து அல்ல. வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில் "***வழக்கு சொத்தானது பிரதிவாதியின் வீட்டுக்கு மேல்புறம் உள்ள சந்து பகுதியாகும்"*** என்று கூறியுள்ளார். அதே போல் வாதியும் தனது குறுக்கு விசாரணையில் ***"மேல்புறத்தில் உள்ள வீட்டில் வடபுறம் என் வீடு, தென்புறம் என் சகோதரர் வீடும் உள்ளது. கீழ்புறத்தில் உள்ள வீடு பிரதிவாதியின் வீடு." எனவே வாதியின் வீட்டுக்கும், பிரதிவாதியின் வீட்டுக்கும் இடையில் சந்து உள்ளது. அது தான் தகராறுக்குரிய சொத்தாகும்".*** என்று கூறியுள்ளார். எனவே வழக்கு சொத்தானது வாதி மற்றும் பிரதிவாதியின் வீடு பகுதியில் உள்ள சந்து பகுதி என்பது இதன் மூலம் தெரிய வருகிறது.

13) பிரதிவாதி தரப்பில் ஏற்கனவே இச்சந்து பகுதி குறித்து அ.வ.30/91 என்ற வழக்கு இப்பிரதிவாதி, வாதியாக இருந்து இவ்வழக்கின் வாதி மீது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டு பின்பு அதனை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்து அது இப்பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது. அதனை மறைத்து இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். அரியலூர் சார்பு நீதிமன்றம் மேல்முறையீடு எண் 62/94 வழக்கின் பதிவேடு பி.வா.சா.ஆ.1 ஆகவும், தீரப்பாணை நகல் பி.வா.சா.ஆ.2 ஆகவும், தீர்ப்புரை பி.வா.சா.ஆ.3 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன ஆவணங்களை பரிசீலிக்கும் போது இவ்வழக்கின் பிரதிவாதி, இவ்வழக்கின் வாதி மற்றும் அவரது சகோதரர்கள் மீது அசல் வழக்கு 30/91ஐ தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டு நிலையில் ஏ.எஸ்.62/94 என்ற வழக்கை சார்பு நீதிமன்றம் அரியலூரில் தாக்கல் செய்து அது இவ்வழக்கின் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளதை காண முடிகிறது. மேற்படி சொத்தின் சர்வே எண் 202/1ல் 3 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது அவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தில் கண்ட A1 B1 மற்றும் E1 F1 பகுதியாகும். சுருக்கமாக சொன்னால் இவ்வழக்கின் தகராறுக்குரிய சந்து பகுதியாகும். பி.வா.சா.ஆ.3 தீர்ப்பு நகலை பரிசீலிக்கும் போது மேற்படி சந்து பகுதி வழியாக நடந்து செல்வதற்கு இவ்வழக்கின் பிரதிவாதிக்கு உரிமையுள்ளது என்று தீர்ப்பு பகரப்பட்டுள்ளது. முந்தய வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கையானது இவ்வழக்கில் பி.வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை பரிசீலிக்கும் போது A1 B1 மற்றும் F1 E1 பகுதியில் அதாவது வாதி, பிரதிவாதியின் வீட்டிற்கு இடையில் 7 அடி அகலம் உள்ள காலி இடம் இருப்பதாக காட்டப்பட்டுள்ளது. இவ்வழக்கின் தாவா சொத்தின் அமைப்பை கண்டறிவதற்காக ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அவரது அறிக்கை நீ.ம.சா.ஆ.1, வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1ஐ பரிசீலிக்கும் போது வாதியின் வீட்டுக்கும், பிரதிவாதியின் வீட்டுக்கும் இடையில் BC என்று குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் ஒரு மீட்டர் அகலமும், 16.6 மீட்டர் நீளமும் கொண்ட காலி இடம் இருப்பதாக

காட்டப்பட்டுள்ளது. ஆனால் அது வாதிக்கு சொந்தமான பகுதிக்குள் அடங்கியதாக குறிப்பிட்டுள்ளாரே தவிர பிரதிவாதியின் சொத்திற்குள் வருவதாக காட்டப்படவில்லை.

14) முந்தய வழக்கான அ.வ.30/91 என்ற வழக்கை தாக்கல் செய்த இவ்வழக்கின் பிரதிவாதி தனக்கு சொந்தமான தாவா சொத்திற்கு கீழ்புறம் உள்ள சொத்தை அவரது மகனுக்கு 20.12.1989 ம் தேதியில் தானசெட்டில்மெண்டாக கொடுத்துவிட்டார். மேற்படி தானசெட்டில்மெண்டில் ***"இந்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் நாளது தேதியில் உன்வசம் விட்டுவிட்டேன். மேற்படி சொத்தை நாளது முதல் சர்வ சுதந்திர பாத்தியத்துடன் ஆண்டு அனுபவித்துக்கொள்ள வேண்டும்"*** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி பார்த்தால் தாவா சொத்தான சந்து பகுதிக்கும் கிழக்கே இப்பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. ஒரு சொத்தில் ஒரு நபருக்கு எவ்வித உரிமையும் இல்லாது போனால் அச்சொத்து குறித்து அவர் வழக்கு தொடர இயலாது. 1989 ம் ஆண்டிலேயே பிரதிவாதி தனக்கு சொந்தமான சொத்தை தனது மகனுக்கு தானசெட்டில்மெண்ட் கொடுத்த பிறகு தன்னுடைய சொத்திற்கான உரிமையை இழந்துவிடுகிறார். தன்னுடைய சொத்தின் உரிமையை இழந்த பிறகு தன்னுடைய சொத்திற்கு பாதை கேட்டு இப்பிரதிவாதி வழக்கு தொடுக்க இயலாது. தன்னுடைய அனுபவத்தில் இல்லாத ஒரு சொத்திற்கு பிரதிவாதி சென்று வருவதற்கு பாதை உரிமை கோர முடியாது.

15) மேலும் பி.வா.சா.ஆ.6 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் வாதியின் வீட்டிற்கும், பிரதிவாதியின் வீட்டிற்கும் இடையில் சந்து பகுதி இருப்பதாக கண்டு நான்கெல்லை எழுதப்பட்டவில்லை. பி.வா.சா.ஆ.6 ஐ பரிசீலிக்கும் போது ***"சூசை, பன்னீர் இவர்கள் மனைக்கும் கிழக்கு***" என்று தான் காட்டப்பட்டுள்ளது. பிரதிவாதி செல்வது போல் சந்து பகுதி இருந்திருந்தால் சந்துக்கும் கிழக்கு என்று தான் பி.வா.சா.ஆ.6 ஆவணம் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எழுதப்படவில்லை. மேலும் மேல்முறையீட்டு எண் 62/94 ல் பிரதிவாதியின்

வீட்டிற்கு பின்புற இடத்திற்கு செல்ல வேண்டுமென்றால் மேற்படி சந்து பகுதி வழியாகத்தான் செல்ல வேண்டும் என்று கூறியுள்ளார்கள். ஆனால் நீதிமன்ற ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 மற்றும் முந்தய வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் வரைபடம் பி.வா.சா.ஆ.4 ஐ பரிசீலிக்கும் போது வாதி, பிரதிவாதியின் வீட்டுக்கு தென்புறம் தெரு இருப்பதை காண முடிகிறது. எனவே மேற்படி தெருவின் வழியாகவே பிரதிவாதியும், வாதியும் தனது வீட்டுக்கோ, அல்லது வீட்டின் பின்புற பகுதிகளுக்கோ சென்று வர முடியும். தாவா சொத்தானது சந்து என்பது நிரூபணம் செய்யப்படாத நிலையில் பிரதிவாதி அதன் மீது உரிமை கொண்டாட முடியாது.

16) இவ்வழக்கை பொறுத்தவரை பிரதிவாதிக்கு தாவா சொத்தாக சொல்லப்படும் சந்து பகுதிக்கு கீழ்புறம் எவ்வித உரிமையும் இல்லை. தனக்கு, சந்து பகுதிக்கு கீழ்புறம் எவ்வித உரிமையும் இல்லாததால் தாவா சொத்தாக சொல்லப்படும் சந்து பகுதியை பிரதிவாதி உரிமை கொண்டாட முடியாது. அச்சொத்தை அனுபவித்து வரும் வாதியின் அனுபவத்தில் இப்பிரதிவாதிகள் எவ்வித ஆட்சேபனையும் இருக்க முடியாது. ஆகையால் இப்பிரதிவாதிக்கு எதிராக வாதி கோரும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது என எழுவினா 1–க்கு தீர்மானம் செய்யப்படுகிறது.

**<u>17. எழுவினா 2–க்கு தீர்வு</u>**

வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என எழுவினா 2–க்கு தீர்மானம் செய்யப்படுகிறது.

எனவே முடிவாக வாதி கோரியவாறு, தாவா சொத்துக்களை பொறுத்து வாதியின் அமைதியான அனுபவத்தில் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ இடையூறு செய்யாத வண்ணம் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தாவா அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால்

கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2021 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்)திரு.எம்.பரமசிவம், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்.

**வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்.**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | – | 8.10.1956 தேதியிட்ட கிரயப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | – | வீட்டுவரி ரசீதுகள் (6 எண்ணிக்கை) |
| வா.சா.ஆ.3 | – | 1050 எண் கொண்ட மனைவரி தோராயபட்டா |
| வா.சா.ஆ.4 | – | குடிநீர் கட்டண ரசீதுகள் (4 எண்ணிக்கை) |
| வா.சா.ஆ.5 | – | மின் கட்டண ரசீதுகள் (4 எண்ணிக்கை) |
| வா.சா.ஆ.6 | – | வீட்டுமனை நீண்டகால அனுபோக உடைமைப் பத்திரம் |

**நீதிமன்ற ஆணையர் சான்றாவணங்கள்.**

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | – | அறிக்கை |
| நீ.ம.சா.ஆ.2 | – | வரைபடம் |

**வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

வா.சா.1 – பன்னீர்செல்வம்

வா.சா.2 – சின்னப்பன்

**பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்.**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | – | A.S.62/94 வழக்கின் சூட் ரிஜிஸ்டர் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.2 | – | A.S.62/94 வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.3 | – | A.S.62/94 வழக்கின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.4 | – | அ.வ.30/91 ன் ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.5 | – | CRP 1470–05 in E.P. 43–04 in O.S.30–91 வழக்கின் தீர்ப்பு நகல் |
| பி.வா.சா.ஆ.6 | – | 20.12.1989 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் சான்றிட்ட நகல் |

**பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

பி.வா.சா.1 – வேளாங்கன்னி (எ) ஆரோக்கியசாமி

(ஒப்பம்)திரு.எம்.பரமசிவம், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்.